

முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், தி.எடப்பாளையம் ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்ட அரசு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை முன்னாள் அமைச்சர் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.





விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எறையானூரில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினை வழங்கினார். உடன் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர்தயாளன் துணை சேர்மன் பழனி,விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிட இருக்கிறது – ஊதியப் பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப்படும்!

# இடைநிலை ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி கற்பித்தல் பணியில் ஈடுபடவும்!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, பிப்.2-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிடப்பட இருக்கின்றது. அதனடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களது ஊதியப்பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப் படும்.



போராட்டக்களத்தில் இருக்கும் ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்பி கற்பித்தல் பணிகளில் ஈடுபடக் கேட்டுக் கொள்கின்றேன்.

இது நம்முடைய அரசு என முதல்வரின் மீது நம்பிக்கை வைத்து போராட்டங்களில் ஈடுபடாமல் மாணவர்களது கற்றல் பாதிக்கப்படாமல் பள்ளிக்குத் தொடர்ந்து சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

மொத்தமுள்ள இடைநிலை ஆசிரியர்களில் பள்ளிப் பணிகளுக்கு செல்லாமல் இருக்கின்ற 5781 ஆசிரியர்களையும் கற்பித்தல் பணிக்கு திரும்ப கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

பி.டி.பாண்டிச் செல்வம் ஏற்பாட்டில் தி.மு.க. வர்த்தக அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா - மாபெரும் கவிதைப்போட்டி!

## முதல் பரிசு ரூ.15 ஆயிரம் உட்பட பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன!

சென்னை, பிப்.2-

திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் கழகத் தலைவர் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 73 ஆவது பிறந்த நாள் 01.03.2026 முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக வர்த்தகர் அணி சார்பில் வர்த்தகர் அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டிச் செல்வம் அவர்கள் முன்னின்று நடத்தும் மாபெரும் கவிதைப் போட்டி நடத்துகிறார். இப்போட்டியில் மாணவர்கள், கவிஞர்கள் பங்கேற்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மார்ச் 1953 ஆம் ஆண்டு முத்துவேல் கருணாநிதி திருமதி தயாளு அம்மையாரின் தவப் புதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தார்

பள்ளி பாலகனாக 14 வயதிலே கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க.வை தொடங்கி பல்வேறு விழாக்களை நடத்தியவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்!

முதன் முதலாக நடத்திய விழா தமிழ்நாட்டின் விடிவெள்ளியாக தந்தை பெரியாரின் தளபதியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அண்ணனாக ஆராளாக அசியல் குருவாக திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னெடுத்து நடத்தியவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அவ் விழாவில் கலந்து கொள்ள பேரறிஞர் அண்ணா அவர்களை நேரில் சென்று அழைத்த வரலாறு இன்றைக்கும் நம் மனதில் பசுமைமாறால் பதிந்திள்ள ஒரு வரலாற்று உண்மையாகும்.

அன்று அரவது அரசியல் பயணம் 14 வயதில் கோபாலபுரம் இளைஞர் தி.மு.க., வைத் தொடங்கி இன்று 73 வயதில் அரசியலில் உச்சத்தை தொட்டுள்ளார் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்!

தற்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்னையின் வயிற்றில் கருவாக இருந்த பொழுதே ‘மிசா’ என்னும் கொடிய சிறை கொட்டடையில் அடைக்கப்பட்ட தழும்பு கொண்டவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.!

கிளைக் கழக உறுப்பினராக, பிரதிநிதியாக கழக துணைப் பொதுச் செயலாளராக கழகப் பொருளாளராக செயல் தலைவராக கழகத் தலைவராக சட்டமன்ற உறுப்பினராக, சென்னை மாநகர மேயராக, அமைச்சராக, துணை முதலமைச்சராக உயர்ந்து இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று திறம்பட திராவிட மாடல் ஆட்சியை பார் போற்றும் வகையில் நடத்திக் கொண்டிருக்கிறார் நமது தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாட்டின் 50 ஆண்டு கால வளர்ச்சியை திட்டங்களை இந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றி சாதனை படைத்துள்ளார் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பசியாற பள்ளிச் சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம் கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் தமிழ்ப் புதல்வன் திட்டம் மாணவச் செல்வங்களின் மேண்மைக்காக நான் முதல்வன் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

மகளிர் அரசு பேருந்துகளில் உரிமையோடு பயணிக்க மகளிர் விடியல் பயணத் திட்டம், வேலை செய்யும் மகளிர்களுக்கான தோழி இல்லங்கள். முதியோர்களுக்கான அன்புச் சோலைகள், தொழிற்சாலைகள், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள், விவசாயப் பெருமக்கள், அயலக தமிழர்கள் என்று அனைத்து தமிழர்களையும் ஒருங்கே அரவணைத்து அவர்களுக்கு வேண்டியவற்றை அவர்கள் கேட்காமலே அள்ளித் தரும் வள்ளலாக திகழ்ந்து கொண்டிருக்கிறார் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு ஊழியர்கள், அரசு ஊழியர்களுடைய 23 ஆண்டுகால கோரிக்கையான உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தி அரசுஊழியர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைத்துள்ளார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கும் ரூபாய் 3000 மற்றும் பொங்கல் தொகுப்பை வழங்கி மகிழ்ச்சியுடன் கொண்டாடிட அவரவர் இல்லங்களில் சிறார்களுக்கு அப்பாவாக, அக் குடும்பத்தினர்களுக்கு சகோதரனாக திகழ்ந்து கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்,

முதியவர்களின் இல்லங்களுக்கே ரேஷன் பொருட்களை கொண்டு போய் சேர்க்கும் திட்டத்தினை செயல்படுத்தி, இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் “தாயுமானவர்” ஆக நிகழ்ந்து கொண்டிருக்கிறார் முத்துவேல் கருணாநித ஸ்டாலின் அவர்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் நடைபெறவிருக்கும் கவிதைப் போட்டி “ தாயுமானவன் தனக்குவமை இல்லாதான் “ என்ற தலைப்பில் நடைபெறுகிறது.

இக் கவிதைப் போட்டியில் வெற்றி பெறும் முதல் பரிசுக்குரிய கவிதைக்கு ரூபாய் 15.000, இரண்டாம் பரிசுக்குரிய கவிதைக்கு ரூபாய் 10,000, மூன்றாம் பரிசுக்குரிய கவிதைக்கு ரூபாய் 5,000 இந்து கவிதைகளுக்கு ஆறுதல் பரிசு தலா ரூபாய் 2000 வழங்கப்படுவதுடன் கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது.

பரிசுக்குரிய கவிதைகளும் மற்றும் சிறப்புக்குரிய கவிதைகளும் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளிவரும். பரிசுகள் வழங்கும் விழா மேடையில் கவிதைப் புத்தகமும் வெளியிடப்படும்.

இம் மாபெரும் கவிதைப் போட்டியில் மாணவ-மாணவியர் மட்டுமல்லாமல் அனைத்துத் தரப்பினரும் கலந்து கவிதைகளை வருகிற 15.2.2026 ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திட வேண்டுகிறோம்.

முகவரி: எண்: எஃப்முத் தமிழ்நகர், தாண்டவராயன் தெரு, தண்டையார் பேட்டை சென்னை 600 061. மேலும்வாட்ஸ் அப் எண்:77080 66077ஆகியவற்றிலும், அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



நெய்வேலியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தின் மிக மூத்த தொழிலாளி ஜே. சிவஷண்முகம் மற்றும் அவரது மனைவி திருமதி எஸ். மஞ்சுளா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் என்.எல்.சி. நிறுவனத்தின் தலைவர் – மேலாண் இயக்குநர் பிரசன்ன குமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் முன்னிலையில் பா.ஜ.க. அதிமுக த.வெ.க.மற்றும் மாற்று கட்சியை சேர்ந்த சுமார் 50பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர். உடன் நகர துணை செயலாளர் தென்னரசு, குபேந்திரன், மாவட்ட பிரதிநிதிஜெ.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் இரா.இராஜேந்திரன்–ஆ.மணி–பெ.பழனியப்பன்–டி.எம்.செல்வகணபதி–எஸ்.ஆர்.சிவலிங்கம்–தே.மதியழகன்–ஒய்.பிரகாஷ்–டி.சந்திரசேகரன்–ஆர்.சிவன் பங்கேற்பு!

# தருமபுரி-கிருஷ்ணகிரி சேலம் மாவட்ட வழக்கறிஞர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்!

## என்.ஆர்.இளங்கோ ஆலோசனை வழங்குகிறார்! இரா.தாமரைச்செல்வன், என்.மருதுகணேஷ், ஜி.சந்திரபோஸ்,எஸ்.வீரமணி,மீஞ்சூர் கே.சுரேஷ் அறிக்கை!

தருமபுரி, பிப்.2-

தி.மு.க. சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் இரா.தாமரைச்செல்வன், என்.மருதுகணேஷ், ஜி.சந்திரபோஸ், எஸ்.வீரமணி, மீஞ்சூர் கே.சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை பின் வருமாறு :

தர்மபுரி கிழக்கு மற்றும் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு, சேலம் கிழக்கு, மேற்கு, ஆகிய மாவட்டங்களின் DLC, CLC, FLC வழக்கறிஞர்களின் ஆலோசனை மற்றும் பயிற்சி பாசறை கூட்டம் இன்று (02.02.2026 திங்கட்கிழமை) மாலை 05.30 மணியளவில் டிஎன்சி மகால், நேதாஜி ரோடு, நெசவாளர் காலனி,தர்மபுரியில் நடைபெறுகிறது. தர்மபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி, மேற்கு மாவட்ட செயலாளர், முனைவர்.பி.பழனியப்பன் ஆகியோர் தலைமையில்,மாவட்ட கழக செயலாளர்கள் இரா.இராஜேந்திரன்,

டி.எம்.செல்வகணபதி எம்.பி, எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி, தே.மதியழகன் எம்.எல்.ஏ, ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி, பங்கேற்று கழக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி வகுப்பும் மற்றும் தேர்தல் பணி குறித்தும் ஆலோசனை வழங்குகிறார்.தர்மபுரி மேற்கு வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் டி.சந்திர சேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணைச் செயலாளர் இரா. தாமரைச்செல்வன், துணைச் செயலாளர்கள் என்.மருதுகணேஷ், ஜி.சந்திரபோஸ், எம்.எஸ்.பி.வீரமணி, தலைமை கழக வழக்கறிஞர் மீஞ்சூர் கே.சுரேஷ், மற்றும் சட்டத்துறை நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், இ.வெங்கடேஷ் ராஜா, ஆர்.திம்மராயப்பா, எஸ்.அருள், எஸ்.செல்லப்பன், ராம்பிரகாஷ்,

பி.கே.முருகன், எம்.விசுவபாரதி, பி.தம்பிதுரை, ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எனவே இந்த பயிற்சி பாசறை கூட்டத்தில் தர்மபுரி கிழக்கு மற்றும் மேற்கு,கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு, சேலம் மேற்கு கிழக்கு மற்றும் மேற்கு , மத்திய மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்,மற்றும் 15 வாக்கு சாவடிகளுக்கு நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் பொறுப்பாளர்கள் (FLC) ஆகியோர் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

# அம்பத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, பிப். 2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 345 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (30.01.2026), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 82 அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், 2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரம், ராகவன்பேட்டை பகுதியில் பழுதடைந்து காணப்பட்ட நகர்ப்புற சாலைகள் சீர் அமைக்கும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் கிழக்கு ஒன்றியம் முத்துவயல் ஊராட்சி முத்துவயல் கிராமத்தில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டம் குழந்தை நேயப்பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் 2024–2025 கீழ் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கணினி ஆய்வகம் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் மற்றும் முத்துவயல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூபாய் 39.95 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டிடத்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர், மற்றும் ஆசிரியர்கள், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் கே.கே. கதிரவன், அவைத்தலைவர் சிங்கராசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சுந்தரவடிவேலு, மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் பாதாள வைரவன், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கிருஷ்ணன், அரியகுடி மணி, ஒன்றிய நிர்வாகிகள், பொறியாளர் அணி முத்துவயல் மங்களேஸ்வரன், ஆதிதிராவிடர் அணி சேமனூர் சாத்தையா, வர்த்தக அணி தென்னவனூர் உதயகுமார்,பிரதிநிதி சாமிநாதன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தமிழ் தாசன், குமரகுரு,ராமச்சந்திரன்,சேமனூர் தினேஷ்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் க. ரியாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.